2001 ஜனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அடிப்படைக் காரணங்களை விசாரித்து, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஏதோ சிமென்ட் விலை உயர்ந்திருக்கிறது, கேரளா போன்ற மாநிலங்களிலே எல்லாம் விலை குறைவாக இருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

முற்பகல் 11-15

நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு 19-1-2001 அன்றைய நிலவரப்படி எனக்குக் கிடைத்த அந்தத் தகவல்களை இங்கே சொல்கின்றேன். தமிழ்நாட்டில் சங்கர் சிமெண்ட் சில்லறை விலையிலே ரூ.190-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. ராம்கோ சிமெண்ட் ரூ. 195-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. செட்டிநாடு சிமெண்ட் ரூ.190 முதல் ரூ. 197 வரை; L&T சிமெண்ட் ரூ. 190-லிருந்து ரூ. 199 வரை; அரசு சிமெண்ட் ரூ.170-லிருந்து ரூ.177 வரை விற்றுக் கொண்டிருக்கின்றோம்.

அதைப்போல கேரளாவில் சங்கர் சிமென்ட் 19-1-2001 நிலவரப்படி ரூ.184-லிருந்து ரூ.199 வரையிலே விற்கிறது. டால்மியா சிமெண்ட் ரூ.194 முதல் ரூ.197 வரையிலே விற்கிறது. அம்புஜா சிமெண்ட் ரூ.192-லிருந்து ரூ.193 வரையிலே விற்கிறது. ஏ.சி.சி. சிமெண்ட் ரூ.178லிருந்து ரூ.191 வரையிலே விற்கிறது. L & T சிமெண்ட் ரூ.182-லிருந்து ரூ.192 வரையிலே விற்கிறது. இப்படி கேரளா மற்றும் அகில இந்திய அடிப்படையிலே பார்த்தால்கூட பம்பாயிலேயும் சிமெண்ட் விலை இன்றைய தினம் 190 ரூபாய்க்கு அதிகமாக விற்கிறது என்று பம்பாயிலே இருக்கக்கூடிய அரசாங்கமே இன்றைய தினம் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, இந்தப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரும் நம்முடைய மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரிடத்தில் இது குறித்துப் பேசியிருக்கிறார். விரைவிலே மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

4. அறிவிப்பு

பேரவைக் கூட்டம் 25-1-2001 அன்று நடைபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-1-2001 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்

அடிப்படையில் 25-1-2001 அன்று பேரவைக் கூட்டம் இல்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 25-1-2001 ஆம் நாளன்று பேரவைக் கூட்டம் நடைபெறும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநரின் உரையின் மீதான விவாதத்திற்கு அன்று பதிலளிப்பார்கள் என்று பேரவையின் அனுமதியோடு தெரிவிக்கின்றேன்.

முற்பகல் 11-15

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 306 முதல் 310 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்;

"தீர்மானத்தில் பின்வருமாறு சேர்க்கப்பட வேண்டும்: 'கோவை நகரில் சிறுவர் உலகம் நிறுவ அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும்;

கோவை நகரில் கோளரங்கம் ஒன்று நிறுவுவது குறித்தும்;

கோவை நகரில் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருக்கும் ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவது குறித்தும்;